**அயகம பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அயகம பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் அயகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட கிரயம் ரூபா 1,966,209 ஆன 03 அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 349,800 ஆன நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | குறித்த சொத்துக்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய மூலதன வருமானம் ரூபா 22,977,117 ஆன போதும், அதனை ரூபா 16,541,898 என கணக்கீடு செய்தமையால் ஆண்டிற்கான மூலதன வருமானம் ரூபா 6,435,219 குறைத்தும், பற்றாக்குறையை அதற்கு சமமான அளவால் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தன. | மீளாய்வாண்டிற்குரிய மூலதன வருமானம் ரூபா 6,435,219 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதனை திரண்ட நிதியத்தினூடாக சரி செய்து இலாபத்தை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். | ஆண்டிற்குரிய வருமானங்கள் செலவுகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய கடன்கொடுனர் ஒதுக்கீடு ரூபா 235,000 கூடுதலாகவும் கணக்கீடு செய்தமையால் ஆண்டின் செயற்பாட்டு செலவு மற்றும் பற்றாக்குறை அதற்கு சமமான பெறுமதியால் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தன. | 2021 ஆண்டில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய வருமானம் செலவுகள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மாகாண சபை பிரதான அமைச்சிலிருந்து கிடைத்த முற்பணத்தை தீர்க்க முத்திரை கட்டணத்திலிருந்து குறைத்துக் கொண்டிருந்த ரூபா 494,312 கணக்கீடு செய்யாததால் நிலுவை முத்திரை கட்டண கணக்கு மீதி மற்றும் முற்பண கணக்கு மீதி சமமான பெறுமதியால் கூடுதலாக காட்டப்பட்டன. | 2021 ஆண்டில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்கள் பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | கடந்த ஆண்டு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் 1.2(ஆ) கீழ் காட்டியுள்ள கணக்கீட்டு குறைபாடுகளை சீராக்குகையில் ரூபா 1,900,000 ஆன நிலுவை முத்திரை கட்டண கணக்கிற்கு செலவு வைக்க வேண்டிய போதும், திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்ததில் மீளாய்வாண்டு இறுதி திகதியன்று நிலுவை முத்திரை கட்டண கணக்கின் மீதி மற்றும் திரண்ட நிதிய மீதி அதற்கு சமமான பெறுமதியால் கூடுதலாக காட்டப்பட்டன. | 2021 ஆண்டில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை முத்திரை கட்டண கணக்கினூடாக சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | கடந்த ஆண்டுகளில் மேற்கொண்ட 05 அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பான நிறுத்தற் பணத்திற்காக மீளாய்வாண்டிலும் கடன்கொடுனர் ஒதுக்கீடு ஏற்பாடு செய்ததில் ஆண்டின் செயற்பாட்டு செலவு மற்றும் பற்றாக்குறை ரூபா 689,434 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய வருமானம் செலவுகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 110,289,521 ஆன 07 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2021 ஆண்டில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது கணக்கு மீதிகளை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | நிதிக்கூற்றுகளில் காட்டப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் பேரேட்டு மீதிகளின் காலப் பகுப்பாய்வு மற்றும் பெறுமதிகளை உறுதி செய்யும் சான்றுகள் காணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 1,466,943 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 1,972,118 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| (i) | கால ரீதியாக குத்தகை அறவிடப்படாததால் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 186,953 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கொரோனா தொற்று நிலைமை காரணமாக காணி உரிமையாளர்களிற்கு சபைக்கு வர முடியாது போனதால் வருமான பெறுவனவு குறைந்துள்ளதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று கிடைக்க வேண்டிய ரூபா 276,754 ஆன நீர் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலவிய கொரோனா தொற்று நிலைமை காரணமாக உரிய கட்டண அறவீடு தாமதித்ததுடன், நிலுவை பணம் அறவிடுவதற்காக கடிதம் மூலம் குறித்த நபர்கள் அறிவூட்டப்பட்டுள்ளதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | கூட்டுத் தொகை 2077 வர்க்க அடியான அயகம வாராந்த சந்தை 16 கடையறைகள் மற்றும் விவசாய பயிர் விற்பனை மத்திய நிலைய கடையறைகளிற்காக அறவிட வேண்டிய முற்செலுத்தற் பணம் (Key Money) முறையே ரூபா 716,000 மற்றும் ரூபா 1,460,000 இனை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2020 மார்ச் மாதம் முதல் கொரோனா நோய் பரவியதுடன் அப் பணத்தை அறவிட முடியாது போனது. விரைவில் அப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| அயகம பேரூந்து தரிப்பிட மேல் மாடி 1743 வர்க்க அடி கடையறைகளை அயகம பொலிஸ் நிலையத்தை நடாத்திச் செல்ல 2017 ஜுலை 01 திகதி ரூபா 19,050 ஆன மாதந்த வாடகை தொகையின் கீழ் குத்தகை வழங்கியிருந்ததுடன், குத்தகை உடன்படிக்கை காலம் 2020 ஜுன் 30 திகதியுடன் முடிவடைந்திருந்தது. எதிர்வரும் ஒரு வருட காலத்திற்கு உடன்படிக்கையை புதுப்பிக்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 2020 ஜுலை முதல் 2020 திசெம்பர் வரையான காலப் பகுதிக்காக நிலுவை வாடகை ரூபா 95,700 இனை 2021 ஏப்ரல் வரையும் அறவிட்டிருக்கவில்லை. | அங்கீகாரத்திற்காக பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பியுள்ளதாகவும், அங்கீகாரம் கிடைத்தவுடனே நிலுவை பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

**4.1 சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சபை அதிகார எல்லையில் மீளாய்வாண்டில் 324 மெட்ரிக் டொன் அளவான திண்மக் கழிவுகளை வெளியிட ரூபா 882,122 ஆன செலவு, 06 ஆளணியினரும் 02 வாகன மற்றும் இயந்திர உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.<br>அவ்வாறாயினும், அக் கழிவுகளை வெளியிடல் ஒழுங்கான மற்றும் சுற்றாடல் நேய முறையிற்கு மாற்றமாக நிலத்தில் குழிகள் வெட்டி அதனுள் கழிவுகளையிட்டு குழிகளை மூடியதனூடாக பல சுற்றாடல் பிரச்சினைகள் எழுந்திருந்தன. | பிரதேச சபையினால் தற்போதும் குப்பைகளை வெளியிட காணி ஒன்றை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாகவும் அதனை மேற்கொண்டு முடிந்தவுடனே முறையான கழிவு முகாமை வேலைத் திட்டத்தை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதாக. | முறையான கழிவு முகாமை வேலைத் திட்டத்தை திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். |